அனுமதி பெறப்படவில்லை” என்று சொன்னார். இருந்தாலும், திரும்பவும் துறையின் செயலாளர் அவர்களை அழைத்து, மத்திய அரசின் வனத் துறையின் செயலாளர் அவர்களுக்குக் கடிதம் ஒன்றை எழுதுங்கள் என்று தெரிவித்தேன். ஏனென்று சொன்னால், அங்குள்ள மக்கள் தங்களுடைய பொதி சுமையைக்கூட சுமந்து செல்ல இயலவில்லை. அங்கு விளையும் காய்கறிகளைக்கூட சந்தைக்கு எடுத்துச் செல்ல இயலாமல், தலையில் சுமந்து காய்கறிகளை எடுத்துச் செல்லும் ஒரு சூழ்நிலை உள்ளது; மலைப் பகுதியில் உள்ள கிராம மக்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, துறையின் செயலாளர் அவர்களை அழைத்து, உடனே இதற்குரிய அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். நானும், இதில் தனிக் கவனம் செலுத்தி, நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்கிற அந்தப் பாதை அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

தடுப்பணை

***12588—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி கிராமம், பச்சையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி கிராமத்தில் பச்சையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டத்திற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு Technical Feasibility *அறிக்கை நீர்வளத் துறையின் திட்டப் பிரிவின்கீழ் (*Plan Formulation*) ஆய்வில் உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

2022 ஏப்ரல் 8]

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த தகவலுக்கு, முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், காவலப்பட்டி ஊராட்சியில் அமைந்திருக்கிற பச்சையாறு, வண்ணாத்தி ஓடை இரண்டையும் இணைத்த மண்ணணை கிட்டத்தட்ட 602 மீட்டர் நீளமும், 26 அடி உயரமும், 108.994 மில்லியன் கன அடி கொள்ளளவு நீரும் கொண்ட அணையாகும். இந்த ஆறு பழனி மலையில் உற்பத்தியாகி, 21 கிலோ மீட்டர் தூரத்தில் பொருந்தலாற்றில் கலந்து, 14 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சண்முகாநதியில் கலந்து, பிறகு, திருப்பூர் மாவட்டத்திலிருக்கக்கூடிய அமராவதி ஆற்றில் கலந்து கடலுக்குச் செல்கிற நிலை இருக்கிறது. இந்த அணையைப் பொறுத்தவரையில், 1985–ல் இதற்கு வடிவமைப்பு ஒப்புதல்* Latitude, Longitude *என்ற முறையில் அனுமதி பெறக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. இது ஒரு தொகுதிக்கு மட்டும் பயன்தரக்கூடிய திட்டமில்லை. இந்தத் திட்டம் பழனி சட்டமன்றத் தொகுதி, ஒட்டன்சத்திரம், மடத்துக்குளம், தாராபுரம் இரண்டு மாவட்ட கரையோர விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய ஒரு திட்டமாகும். தற்போது உள்ள நிதிநிலைமையை நாங்கள் அறிவோம். நம்முடைய அரசின் சூழ்நிலையை நாங்கள் அறிவோம். இருந்தபோதிலும், இந்தத் திட்டம் அந்தப் பகுதிக்கு வர வேண்டுமென்பது விவசாயப் பெருங்குடி மக்களுடைய வேண்டுகோளாகும்.*

ஒரு செய்தியை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். பழனியைச் சுற்றியிருக்கிற அணைகள் எல்லாம் தலைவர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்டவை, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்கூட இதனை அறிவார்கள். தலைவர் கலைஞர் அவர்களின் மறு உருவமாய் இருந்து, நம்மை வழி நடத்துகிற நம் தலைவர் அவர்களுடைய மக்களாட்சியில், இந்தத் திட்டம் அந்தப் பகுதிக்கு வரவேண்டும் என்கிற ஆவல் விவசாய பெருங்குடி மக்களுக்கு இருக்கிறது. எனவே, விரைந்து இந்தத் திட்டத்தை மக்களுக்கு வழங்க முன் வரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை வேண்டி அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆவல் சரியானதுதான். அவர் சொன்ன செய்திகள் சரிதான். ஆனால், இந்தப் பச்சையாறு திட்டம் என்பது ஒரு மிகப் பெரிய சோகக் கதையாக உள்ளது. அதைப்பற்றி நான் சொல்கிறேன், கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, பச்சையாறு, வண்ணாத்தி ஓடை இரண்டும் பொருந்தலாறு, சண்முகாநதி ஆகியவற்றில் கலந்து கடைசியில் கடலில் கலப்பது உண்மைதான். பச்சையாற்றில் ஓர் அணை கட்ட வேண்டுமென்று 1985–ல் கள ஆய்வினை நடத்தினார்கள். அணையை எங்கு கட்டலாம் என்று பார்த்தபோது, இரண்டும் சேர்கிற இடத்தில், வண்ணாத்தி ஓடையில் அணையைக் கட்டலாம் என்றார்கள். அணையைக் கட்டுவதற்கு முன், Feasibility report, CLA Clearance போன்றவற்றை எல்லாம் பார்ப்பார்கள். அதன்பின், இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்குமாறு நிதித் துறையிடம் கேட்கும்போது இதற்கு நீங்கள் CLA Clearance வாங்க வேண்டுமென்றார்கள். CLA Clearance என்றால், Commissioner of Land Administration; அவர்கள் அதனை ஆய்வு செய்தார்கள். ஒரு ரூபாய் செலவு செய்தால், இதில் எவ்வளவு வருமானம் வரும் என்பதைப் பார்ப்பதுதான் அவர்களுடைய வேலையாகும். அதுபோன்று, 1985–ல் ஒரு ரூபாய் செலவு செய்தால், சர்க்காருக்கு எவ்வளவு return வரும் என்று பார்த்தார்கள். 22 பைசா வரும் என்றபோது, மிகவும் கஷ்டம், இது ஒத்துவராது என்று கூறி விட்டுவிட்டார்கள். ஆனாலும், அவர்களை விடவில்லை.

முற்பகல் 10–30

1989 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். அப்போதுதான் நாங்கள் அந்தத் திட்டத்தினை திரு. ஐ.பி. அவர்களுடன் சென்று பார்த்துவிட்டு வந்தோம். அங்கு பூவேந்தன் என்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர் இருந்தார். அவர் சட்டசபையில் இதைத் தவிர வேறு ஒன்றும் கேட்கமாட்டார். அப்போது அவர் கேட்டதற்கு, இவர் சொல்கிறார், நாங்கள் போய் பார்த்துவிட்டு வந்தோம் என்று சொல்லிவிட்டு, ரூ.30 கோடி allot செய்து அவருக்கு உடனே அனுப்பினோம். யாருக்கு? C.L.A.–விற்கு அனுப்புகிறோம். இதனை இப்போது கொடுக்கலாமா என்று கேட்கிறோம். (சிரிப்பு) அதாவது இதனை ஆராய்ந்து பார்த்து ரூ.1 செலவு செய்தால் ரூ.1.35 காசு return வருகிறது. அப்படியென்றால் இலாபம் தானே!

2022 ஏப்ரல் 8]

இதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் அல்லவா? ஆனால், இவ்வளவு தொகை வந்தாலும்கூட, வறட்சி அல்லாத பகுதியாக இருந்தால் அங்கு ரூ.1.5 வரவேண்டும்; ஆனால், அங்கு ரூ.1.35 தான் இருக்கிறது. இது வறட்சி அல்லாத இடம், நல்ல இடம், ஆகையால் ரூ.1.5 இல்லாததால் reject *என்று சொல்லிவிட்டார்கள். இதுவும் முடிந்ததா? அடுத்து, 2003 ஆம் ஆண்டு மறுபடியும் தள ஆய்வு. அவர்கள் கேட்க. துறை அனுப்ப, மாவட்ட ஆட்சியர் அவர்கள் வருத்தப்பட்டு நேரடியாக* C.L.A.*–விற்கு அனுப்பினார்கள்.* C.L.A.*–விற்கு போனவுடன் அவர்களும்* reject *செய்துவிட்டார்கள். இது முடிந்ததற்குப் பின், 2004 ஆம் ஆண்டு ஓர் ஆய்வு நடத்தப்பட்டது; எவ்வளவு சோகக் கதை பாருங்கள் இது. அந்த ஆய்வில் இப்போது எவ்வளவு பணம் என்று கேட்டால் ரூ.52 கோடி என்றார்கள். மறுபடியும்* C.L.A.*–விற்கு அனுப்புகிறோம்.* C.L.A. *சொல்கிறார்கள் ரூ.1–க்கு 43 பைசா தான் வருகிறது, கிடையாது என்று சொல்லிவிட்டார்கள்; மாறி மாறி வந்தது. 2020 ஆம் ஆண்டு மறுபடியும் ஆய்வு. 65 கோடி ரூபாய் போட்டார்கள். மறுபடியும்* C.L.A.*–விற்கு அனுப்பப்பட்டது. ரூ.1–க்கு 22 காசுதான் வருகிறது, அதனால் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொடங்கிய இடத்திற்கே வந்துவிட்டது. தொடங்கியது 22 பைசாதான். அதே இடத்திற்கு வந்துவிட்டது.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *ஆம். அது மாறிவிடும். 2021–ல் மறுபடியும், என்ன இப்படி செய்கிறார்களே என்று* Hydrology*–க்கு போட்டு மறுபடியும் செய்து கொடுத்தோம். அங்கு பார்த்தால் ஒரு ரூபாய்க்கு இரண்டு பைசாதான் வருகிறது. அதனால் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். (சிரிப்பு) இவ்வளவும் செய்து முடித்துவிட்டு, கோபப்பட்டு, 16 இடங்களில் ஆழ்துளை கிணறு போட்டு எடுத்துப்பார்க்கலாம் என்று பார்த்தோம். 16 இடங்களில் ஆழ்துளை கிணறு போட்டோம், பாறையே இல்லை. ஆனால், இதற்கு அதிகம் செலவாகும், பாறை இருந்தால் கொஞ்சம்தான் செலவாகும், ஆகையால் இது முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இல்லை என்றாலும் பரவாயில்லை, நாங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்கிறோம் என்று சொன்னோம். அப்போது* C.L.A. *நான்கு கருத்துகளைச் சொல்கிறார்,* Safe, Semi–critical, Critical, Over–exploited. Safe *என்றால் பாதுகாப்பானது,* Semi–Critical *என்றால் அபாயகரமானது.* Critical *என்றால் மிக அபாயகரமானது,*

Over–Exploited என்றால் அதிகமாக எடுக்கப்பட்டது. எனவே, தடுப்பு அணை கட்ட முயன்றபோது, இது நல்ல வளமானது, இது பாதுகாப்பான இடம், ஆகையால் இங்கு முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆக, இவ்வளவு செய்தும் முடிக்கவில்லை. இதுபோல்தான் எல்லாவற்றிலும் மறுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். நான் 1989 ஆம் ஆண்டு Minister ஆனவுடன் முதலில் அவர்களின் ஊருக்குச் சென்றுதான் நம்பியாறு அணை கட்டப்போனேன். ஒரே நேரத்தில் நம்பியாறு மற்றும் பொய்கை அணையினைக் கட்டப்போனோம். அப்போது மறுத்துவிட்டார்கள். தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் வந்து சொன்னேன். C.L.A.–வைக் கூப்பிட்டு என்ன இது என்று கேட்டார், C.L.A. அவர்களிடம் என்ன சமாச்சாரம் என்றார்கள்? இத்திட்டத்தில் ரூ.1 செலவு செய்தால் 20 காசுகள், 25 காசுகள் தான் வருகிறது. அதனால் இலாபம் இல்லை என்பதால் கட்டக் கூடாது என்று சொல்கிறார். கலைஞர் அவர்கள் சொல்கிறார். நீங்கள் யாராவது விவசாயியின் பிள்ளைகளா என்று கேட்டார். எல்லோரும் சிரித்தார்கள். கலைஞர் அவர்கள் சொன்னார், “நான் விவசாயி மகன், உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது, ஏனய்யா, நாம் ஒரு சர்க்கார், வியாபாரமா செய்கிறோம் நாம்? Industries என்றால் இதுபோன்று பார்க்கலாம். விவசாயியிடம் போய் returns கேட்கிறீர்களே! இதைவிட கேவலம் உண்டா? Go ahead” என்று சொல்லி கையெழுத்து போட்டார்கள். அப்போதுதான், அவர் சொன்னதால்தான் நம்பியாறு அணை கட்டினேன், ஒரே நேரத்தில் பொய்கையாறு அணை கட்டினேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுமுடியாறு கட்டினீர்கள். பொய்கையாறு அணை கட்டினீர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அடவிநயினாறு அணை கட்டினேன், பொய்கையாறு அணை கட்டினேன், நங்காஞ்சி ஆறு அணை கட்டினேன், வடக்குப் பச்சையாறு அணை கட்டினேன், சாஸ்தா கோயில் அணை கட்டினேன், நங்காஞ்சியார் அணை கட்டினேன், கிருதுமால் அணை கட்டினேன், இருக்கன்குடி அணை கட்டினேன், நல்லதங்காள்ஓடை அணை கட்டினேன், மோர்தானா அணை கட்டினேன்; சோத்துப்பாறை அணை உள்ளிட்ட 46 அணைகளைக் கட்ட ஒரே உத்தரவில் கையொப்பம் போட்டார்;

2022 ஏப்ரல் 8]

செய்யச் சொன்னார்கள். அதுபோல் சோத்துப்பாறை அணை; இவர்கள் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அப்புறம் நபார்டில் வாங்கினோம். இதை விட்டுவிட்டுப் போய்விட்டீர்களே! பிறகு நாங்கள்தானே எடுத்தோம். ரூ.40 கோடி மதிப்பீட்டை ரூ.100 கோடி என ஆக்கிவிட்டு போய்விட்டீர்களே! சரி, அது இருக்கட்டும். ஆகையால் இதுபோல் அவர்களின் சட்டம் இருக்கின்றது. ஆகவே, என் கையில் இது இல்லை. அவர்கள் அப்பா சொன்னதை நான் சொல்லிவிட்டேன். (சிரிப்பு)

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பழநி முருகன். . .*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *இதில் இன்னொரு பிரச்சினை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்கூட முடியாமல் இருக்கலாம். ஏனென்றால், இந்த அணைக்கும் மேலே இன்னொரு அணை இருக்கிறது.* Plan permission*–க்கு வரும்போது அதிகாரியைக் கூப்பிட்டுப் பேசினேன். எவ்வளவு நிதி வேண்டுமென்றாலும் நான் ஒதுக்குகிறேன் என்று சொன்னேன். அப்பொழுதுகூட கட்ட முடியாது என்று சொன்னார். நீங்கள் ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள் என்று கேட்டேன். இந்த அணைக்கு மேலே,* forest *அணை இருக்கிறது. இதை உயரமாகக் கட்டினால், அது மூழ்கிவிடும் என்று சொன்னார். எது, எதை மூழ்கடிக்கப்போகிறது என்று தெரியவில்லை. ஆகையால், இதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தனியாகப் பேசலாம். நம்முடைய உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்களுக்கு முருகன்தான் அருள் புரிய வேண்டும். வேறு வழியில்லை. அதுதான் நிலைமை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகன்தான் அருள் புரிய வேண்டுமென்று சொன்னார். துரைமுருகனாக நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே இருக்கின்றார். ஆக, ஒரு கேள்விக்கு இவ்வளவு அற்புதமான ஒரு விளக்கத்தை, அனைவரும் தெரிந்துகொள்ளக்கூடிய அளவில் அவர் இன்றைக்கு அளித்திருக்கிறார்.*

இந்த அரசு மக்களுக்கான அரசு. நம் தலைவர் மக்கள் தலைவர். அதைத்தான் நான் இந்த நேரத்தில் மீண்டும் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

என்ற 390–வது குறளின்படி, வேண்டுவோர்க்கு தேவையானவற்றைக் கொடுப்பதும், மாற்றுக் கருத்து உடையவர்களிடத்தில் இனிமையாகப் பேசுவதும், நீதி விளங்க ஆட்சி செய்வதும், மக்களைக் காப்பதும் என்கிற நிலையில் ஒரு சிறந்த ஆட்சி, மக்கள் ஆட்சி, இந்திய ஒன்றியத்தில் பிற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக திகழ்கின்ற ஓர் அரசை நம் மக்கள் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கின்றார். மக்களுக்கான திட்டங்களில் இலாப, நஷ்டங்களைப் பார்க்கக் கூடாது என்று மறைந்த தலைவர், நம் உள்ளங்களில் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். அதைத்தான் நம்முடைய அவை முன்னவர் அவர்கள் இங்கே தன்னுடைய பதிலிலும் சொல்லியிருக்கின்றார். ஆக, நம்பிக்கை ஒளி உங்களுடைய வார்த்தைகளில் தெரிகிறது. நிச்சயமாக அந்த அணை அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு எதிர்காலத்தில் கிடைக்கும் என்கிற நம்பிக்கையோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பிலும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை, உணவுத் துறை அமைச்சர் அவர்களின் சார்பிலும் நான் பணிவோடு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

வேளாண்மைக் கல்லூரி

***459—முனைவர் T.R.B. ராஜா:**

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—